தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 27-2-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடை செய்த கொத்தமல்லியை உடனே விற்கவும்

இந்தியாவில் சாகுபடி செய்யப்படும் வாசனை பொருட்களில் கொத்தமல்லி முக்கியமானதாகும். இந்தியாவில் கொத்தமல்லி இராஜஸ்தான், ஆந்திரபிரதேசம், குஜராத், மத்தியபிரதேசம் மற்றும் கர்நாடகா மாநிலங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் முக்கியமாக இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் பரவலாக பயிரிடப்படுகிறது. மேற்கண்ட மாவட்டங்கள் மாநிலத்தில் மொத்த கொத்தமல்லி சாகுபடியில் 76.59 சதவீதம் பங்களிக்கின்றன. இம்மாவட்டங்களில் ஊடுபயிராக மானாவாரி சாகுபடியில் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் மேற்கொள்ளப்படுகிறது.

தமிழ்நாட்டில் அனைத்து விவசாயிகளும் நுகர்வோர்களுக்கு ஏற்ற உள்ளூர் ரகத்தை பயிரிடுகின்றனர். அதனால் வியாபாரிகள் உள்ளூர் ரக கொத்தமல்லியை அதிக அளவு கொள்முதல் செய்கின்றனர். தமிழ்நாட்டின் உற்பத்தி குறைவாக உள்ளதால், நமது தேவைக்காக இராஜஸ்தான் மற்றும் ஆந்திரபிரதேச மாநிலங்களின் உற்பத்தியை சார்ந்துள்ளது.

ஒவ்வொரு வருடத்திலும் கொத்தமல்லியின் வரத்து ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை இருக்கும். தற்போது, தமிழ்நாட்டில் புதிதாக அறுவடை செய்யப்பட்ட கொத்தமல்லியின் வரத்து வரத்தொடங்கி உள்ளது. மேலும் மார்ச் மாதம் இறுதி வரை இவற்றின் வரத்து இருக்கும். கடந்த 2010ம் வருடத்திலிருந்து முக்கிய சாகுபடி மாவட்டங்களில் வறட்சியின் காரணமாக வரத்து குறைந்து விலை அதிகரித்து காணப்பட்டது. கடந்த வருட பருவ மழை இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் குறைவாக இருந்த போதிலும் தற்போது வரத்து அதிகரித்து வருகின்றது.

தோட்டக்கலை துறை புள்ளியியல் விவரங்களின் படி இராமநாதபுரம் மாவட்டத்தில் கொத்தமல்லி ஜனவரி 2015 நிலவரப்படி 1492 எக்டரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது கடந்த

வருடம் 2013-14யை காட்டிலும் 750 எக்டர் குறைவாகும். விருதுநகர் மாவட்டத்தில் ஜனவரி 2015 நிலவரப்படி 1250 எக்டர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது கடந்த வருடம் 2013-14யைக் காட்டிலும் 500 எக்டர் குறைவாகும். தற்போது புதிதாக அறுவடை செய்யப்பட்ட கொத்தமல்லியின் விலை குவிண்டாலுக்கு ரூபாய் 6200 முதல் 7000 வரை விற்பனை செய்யப்படுகிறது.

விவசாயிகள் வரும் மார்ச் - ஏப்ரல் 2015 அறுவடை கால விற்பனை முடிவிற்கு ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகத்தில் கடந்த 12 வருடங்களின் விருதுநகர் மொத்த சந்தையின் கொத்தமல்லி விலை நிலவரம் மற்றும் வர்த்தக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

விலை விவரங்கள் ஆய்வு மற்றும் வர்த்தக ஆய்வுகளின் அடிப்படையில் தற்சமயம் அறுவடைக்கு வரும் கொத்தமல்லியின் விலை குவிண்டாலுக்கு ரூபாய் 6500 முதல் 7000 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தியாவின் கொத்தமல்லி முக்கிய உற்பத்தி மாநிலங்களில் அதிகரித்துள்ளதால் வரும் மார்ச் 2015 மாதத்தில் விலை உயர வாய்ப்பில்லை. எனவே விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்த கொத்தமல்லியை உடனே விற்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி - 0422-2431405

<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வாசனை மற்றும் நறுமணப் பொருட்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி - 0422-6611284

மக்கள் தொடர்பு அலுவலர்